பாரம்பரிய மூலிகை மருத்துவம்

# பெரியம்மை (லம்பி தோல்) நோய்



## அ. வாய் வழி மருந்து

(குறைந்தது ஒரு மணி நேர இடைவெளியில் உண்ண கொடுப்பது )

### 1 முதல் மருந்துவம்

தேவையான பொருட்கள் (ஒரு முறை கொடுக்க - ஒரு டோஸ்):

வெற்றிலை - 10 எண்ணிக்கை ; மிளகு - 10 கிராம் ;
உப்பு -10 கிராம் ; வெல்லம் - தேவையான அளவு

தயாரிப்பு முறை:

- வெற்றிலை, மிளகு, உப்பு இவற்றை பசையாக அரைக்கவும் . அதனுடன் வெல்லம் சேர்க்கவும்
- அரைத்த கலவையை சிறிது சிறிதாக வாய் வழியாக கொடுக்கவும்
- முதல் நாள் ( நாள் -1) - மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை (ஒரு டோஸ்) கொடுக்கவேண்டும்
- இரண்டாம் நாள் முதல் : ஒரு நாளைக்கு மூன்று முறை ( 3 டோஸ்) வீதம் இரண்டு வாரங்கள் கொடுக்கவும்
- ஒவ்வொரு முறையும் இதனை புதியதாக தயாரிக்க வேண்டும்






### 2 இரண்டாம் மருந்துவம்

தேவையான பொருட்கள் (இரண்டு முறை கொடுக்க - இரண்டு டோஸ்):

பூண்டு - 2 பல் ; கொத்தமல்லி விதை - 10 கிராம் ; ஜீரகம் - 10 கிராம் ; துளசி - 1 கைப்பிடியளவு ; இலவங்கப்பட்டையின் காய்ந்த இலைகள் - 10 கிராம்; மிளகு - 10 கிராம் ; வெற்றிலை - 5 ; சின்ன வெங்காயம் -2; மஞ்சள் தூள் - 10 கிராம் ; நிலவேம்பு இலையின் பவுடர் -30 கிராம்; திரு நீற்று பச்சிலை - 1 கைப்பிடியளவு; வேப்பிலை - 1 கைப்பிடியளவு ; வில்வ மர இலை - 1 கைப்பிடியளவு ; வெல்லம் - 100 கிராம்

தயாரிப்பு முறை:

- மேற்கூறியவற்றை அரைத்து, அதனுடன் வெல்லம் சேர்க்கவும்.
- அரைத்த கலவையை சிறிது சிறிதாக வாய் வழியாக கொடுக்கவும்.
- முதல் நாள் ( நாள் -1) - மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை (ஒரு டோஸ்) கொடுக்கவேண்டும்
- இரண்டாம் நாள் முதல் : தினமும் 2 வேளை (2 டோஸ்), காலை ஒருமுறை ( 1 டோஸ்) , மாலை ஒருமுறை ( 1 டோஸ் ) நோய் செரியாகும் வரை கொடுக்கவேண்டும்.
- ஒவ்வொரு முறையும் இதனை புதியதாக தயாரிக்க வேண்டும்.




## ஆ வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டும்

(ஏதேனும் புண்கள் இருந்தால்)

### தேவையான பொருட்கள்

குப்பைமேனி கீரை இலை - 1 கைப்பிடியளவு ; பூண்டு - 10 பல்; வேப்பிலை - 1 கைப்பிடியளவு தேங்காய்எண்ணெய் (அ ) நல்லெண்ணை - 500 மில்லிலிட்டர் ; மஞ்சள் தூள் - 20 கிராம்; மருதாணி இல்லை - 1 கைப்பிடியளவு ; துளசி - 1 கைப்பிடியளவு




### தயாரிப்பு முறை :

(i) அனைத்து பொருட்களையும் நன்றாக அரைக்கவும்.
(ii) அரைத்த கலவையுடன் 500 மில்லிலிட்டர் தேங்காய் எண்ணெய் (அ ) நல்லெண்ணெய் கலந்து கொதிக்க வைத்து ஆற வைக்கவும்.

### பயன்படுத்தும் முறை :

புண்ணை சுத்தப்படுத்தியபின் மருந்தை நேரடியாக தடவவும்

### ஒரு வேளை புண்ணில் புழுக்கள் இருந்தால்:

ஒரு வேளை புண்ணில் புழுக்கள் இருந்தால் முதலாவது நாள் மட்டும் தேங்காய் எண்ணையில் கற்பூரத்தை கலந்து அதை தடவவும், அல்லது சீதாப்பழ மர இலைகளை அரைத்து பேஸ்டாக்கித் தடவவும்.





NATIONAL DAIRY DEVELOPMENT BOARD

தொழில்நுட்ப உதவி : பேராசிரியர் : N.புண்ணியமூர்த்தி (profpunniya@gmail.com)
மேலும் தகவல் அறிய தொடர்பு கொள்ளவும்: : anand@nddb.coop

www.nddb.coop • facebook.com/NationalDairyDevelopmentBoard

TDU Institute of Transdisciplinary Health Sciences & Technology